நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.108/2023

<u>அ.சா: 8 (LW 10)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.காளிராஜன். | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

11.02.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
-----------------------------------------------------------------------

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 11.16 பி.ப

நான் தற்பொழுது விக்ரம் சிறப்பு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2022ம் தேதி காலை 06.45 மணியளவில் தேனி மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீரங்கபுரம் அஞ்சல், தொடிச்சேரியை சேர்ந்த எண்.2/136/2 ரைஸ் மில் தெருவை சேர்ந்த சோமசுந்தர மகன் 57 வயது மதிக்கத்தக்க குமரன் என்பவரை இனம் தெரிந்த நபர் தனது சகோதரர் அரிவாளால் ஸ்ரீரங்கபுரம் பேருந்து நிறுத்ததில் வெட்டியதாக சொன்னார். அவர் அன்றைய தினம் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் இங்கு வருவதற்கு முன்பாக தேனி க.விலக்கு அரசு


Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.11 18:00:56 +0530

மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறகு இங்கு மேல் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு....

1. தலையின் இடது பக்க பிறட்டை பகுதியில் 3 செ.மீ நீளம் அளவில் தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
2. காயம் 1 அருகில் 3 செ.மீ அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
3. இடது புஜத்தில் 5 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
4. இடது முன் கையில் 5 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
5. இடது கட்டை விரலில் 3 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
6. இடது மோதிர விரலில் 3 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
7. வலது சிறு விரலில் 5 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
8. வலது மோதிர விரலில் 3 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
9. வலது நடு விரலில் 2 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
10. வலது நடு விரல் முனைப்பகுதியில் 1 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
11. இடது முட்டியில் 5 செ.மீ நீளம் அளவிற்கு தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.
12. இடது புஜம், இடது சிறு விரல், வலது ஆள்காட்டி விரல் மற்றும் வலது முட்டியில் சிராய்ப்பு காயங்கள். காணப்பட்டன.

அவருக்கு மூளையில் C.T ஸ்கேன் எடுத்து பார்த்ததில்...

1. தலையில் இடது பிறட்டல் பகுதியில் இரத்த கசிவு மற்றும் பிறட்டல் எலும்பு முறிவு காணப்பட்டது.
2. இடது பிரண்டால் மற்றும் பிறட்டல் பகுதியில் காற்று உள்ளடக்கி இருந்தது.

3. இடது பிறட்டல் பகுதியில் கபலா வெளி பகுதியில் வீக்கம் காணப்பட்டது. குமரன் சிகிச்சை முடிந்து 01.09.2022ம் மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் கொடுத்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.5** ஆகும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

காயம்பட்ட குமரன் எங்களது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும்பொழுது தேனி அரசு மருத்துவமனையிலிருந்து பரிந்துரை கடிதத்துடன் வந்தாரா என்றால் அவ்வாறு வரவில்லை. பரிந்துரை கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. தேனி க.விலக்கு அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது. 1 முதல் 11 காயங்கள் தையலிடப்பட்டிருந்தது. எங்களது மருத்துவமனைக்கு வரும்பொழுது க.விலக்கு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கையும் எதுவும் கொடுக்கவில்லை. எங்களது மருத்துவமனையில் எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கை, எக்ஸ்ரே அவரிடம் கொடுத்துவிட்டோம். சிராய்ப்பு காயங்கள் கரடுமுரடான பாதையில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. 1, 2 காயங்கள் கூர்மையான கற்களில் விழுந்தால் வர வாய்ப்புள்ளதா என்றா வாய்ப்புள்ளது. 1 முதல் 12 காயங்கள் சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் இருந்ததால் என்னால் நீளம் மற்றும் அகலம் பற்றி சொல்ல முடியாது என்றால் சரிதான். முதல் 2 காயங்கள் கொடுங்காயங்கள் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். சி.டி.ஸ்கேன் அறிக்கையின் படி முதல் 2 காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கினேன். ஆய்வாளர் என்னிடம் ஆயுதத்தை காண்பித்து விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. காயம்பட்ட நபருக்கு மற்ற நபரை தாக்கும்பொழுது மற்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.11 18:01:08 +0530

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.35 பி.ப**

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.11 18:01:12 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:11.02.2026